**தென்காசி மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள்**
**முன்னிலை : திரு.A.K.கமல்கிஷோர்,இ.ஆ.ப.,**

**ந.க.எண். COLR/1832/2022-A2** **நாள் – 18-04-2024**

**பொருள்** கருணை அடிப்படையில் பணிநியமனம் – தென்காசி மாவட்ட வருவாய் அலகு – கடையநல்லூர் வட்டம் – கிளாங்காடு கிராமம் – கிராம நிருவாக அலுவலர் திரு.வே.சுப்புராஜ் என்பவர் 23.03.2019 அன்று பணியிடையே காலஞ்சென்றது – அவரது மகள் **செல்வி.விசாலாட்சி** என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கியது – பணிவரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக

**பார்வை**

1. தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.அ4- 549-2021, நாள் -24.05.2021
2. அரசாணை நிலை எண். 33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ1) துறை நாள். 08.03.2023.
3. கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண். ஆ.கு.3/4600/2024 நாள். 20.02.2024
4. தொடர்புடைய ஆவணங்கள்

***************

**ஆணை:-**

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், கிளாங்காடு கிராமம், கிராம நிருவாக அலுவலராகப் பணிபுரிந்து 23.03.2019 அன்று பணியிடைக்காலமான திரு.வே.சுப்புராஜ் (லேட்) என்பவரது மகள் செல்வி.விசாலாட்சி என்பவருக்கு பார்வை-1ல் கண்டுள்ளவாறு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களை பணிவரன்முறை செய்வது தொடர்பாக பார்வை-

3ல் காணும் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் கடித எண். ஆ.கு.3/4600/2024, நாள்.20.02.2024 கடிதத்தில் கீழ்க்காணும் அரசு கடிதங்களில் சுட்டிக்காட்டப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றி பணிவரன்முறை செய்ய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

i. அரசு கடிதம் (1D) எண். 850 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை நாள். 08.12.2023,
ii. அரசு கடிதம் (1D) எண். 900 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை நாள். 26.12.2023,
iii. அரசு கடிதம் (1D) எண். 13 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை பணி 9 (2) பிரிவு நாள். 18.01.2024,
iv. அரசு கடிதம் (1D) எண். 64 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை நாள். 18.01.2024,

மேற்கண்ட அரசுக்கடிதங்களில் கீழ்க்கண்டவாறு தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

I. பணியிடையே காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் நியமன அலுவலர்களால் வழங்கப்பட்ட பணியினை ஏனைய விதிகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில், மேற்காணும் அரசு, மனித வள மேலாண்மைத்துறையின் கடிதத்தில் உள்ள வழிகாட்டுதல்களின்படி முடிவு செய்து உரிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும்,
II. பணியிடையே காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்கள் விண்ணப்பம் அளித்த நாளில் குறும வயதினை நிறைவு செய்யாதிருப்பினும் அவர்களுக்கு கருணை அடிப்படையில் நியமன அலுவலர்களால் வழங்கப்பட்ட பணியினை, ஏனைய விதிகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில், மேற்காணும் அரசு, மனித வள மேலாண்மைத்துறையின் கடிதத்தில் உள்ள வழிகாட்டுதல்களின்படி வரன்முறை செய்ய உரிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும்.
III. பணியிடையே காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு நியமன அலுவலர்களால் வழங்கப்பட்ட பணியினை, ஏனைய விதிகளை பூர்த்திசெய்யும் பட்சத்தில், மேற்காணும் அரசு, மனித வள மேலாண்மைத்துறையின் கடிதததில் உள்ள வழிகாட்டுதல்களின்படி வரன்முறை செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
IV. பணியிடையே காலஞ்சென்ற அரசுப்பணியாளர்களின் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க மேற்கொள்ளும் அரசு, மனித வள மேலாண்மைத்துறை அளித்துள்ள தெளிவுரையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளுமறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசு கடித எண். 5532/G2/2023-1, Human

resources Management (G-Department), Dated: 20.09.2023

எனவே Tamil Nadu Civil Services (Appointment on Compassionate Grounds) rule, 2023-ன் படி கருணை அடிப்படையிலான பணிநியமனம் தனியருக்கு 24.05.2021-ல் வழங்கப்பட்டு, தனியர் இளநிலை வருவாய் ஆய்வாளராக, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகத்தில் 31.05.2021 முற்பகலில் பணியேற்பு செய்துள்ளார். தனியர் பணிநியமனம் வழங்கப்பட்ட போது தமிழ்நாடு குடிமைப்பணிகள் (கருணை அடிப்படையிலான நியமனம்) விதிகள் 2023-ன் பிரகாரம் அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளதால், **தனியரின் பணியினை பணியில் சேர்ந்த நாளான 31.05.2021- முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியில் வரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.**

மேற்படி உத்திரவு விபரத்தினை தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

Signed by
Kamal Kishore Annery Kundanchery
Date: 18-04-2024 12:58:48

**A K KAMAL KISHORE**
18-04-2024
**மாவட்ட ஆட்சியர்**
**தென்காசி**

**பெறுநர்.**

செல்வி.விசாலாட்சி,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம்,
தென்காசி.

**நகல்.**

1. மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், தென்காசி.
2. அ2- இருப்பு கோப்பு